# ஈஸியா செய்யுங்க... வீட்டை அழகாக்குங்க...

## கீ ஹோல்டர்!



இந்த வாரம் நாம 'கீ ஹோல்டர்' செய்ய கத்துக்கப் போறோம். வீட்டுச்சாவி, சைக்கிள் சாவி, ஸ்கூட்டர் சாவியை எங்கேயாவது வைத்துவிட்டு தேடுவது பல வீடுகளில் நடக்கும் விஷயம். சாவியை தேடாமல் இருக்க, அதை ஒரே இடத்தில் மாட்டணும். அதுக்கு இந்த 'கீ ஹோல்டர்' உதவும். இதை செய்யக் கற்றுக் கொடுக்கப் போறவங்க பூமாதேவி.

**தேவையான பொருட்கள்:**

போர்டு அல்லது ப்ளைவுட்: தேவைக்கு

வெள்ளை எம்.சீல்: தேவைக்கு

முக பவுடர்: தேவைக்கு

பெவிக்கால்: தேவைக்கு

பேப்ரிக் பெயிண்ட்: தேவையான நிறங்களில்

பிரஷ்: தேவைக்கு

கருப்பு எனாமல் பெயிண்ட்: தேவைக்கு

மண்ணெண்ணை: தேவைக்கு

தண்ணீர்: தேவைக்கு

**செய்முறை:**

நமக்கு எந்தளவுக்கு கீ ஹோல்டர் தேவையோ அந்தளவுக்கு ப்ளைவுட்டை துண்டாக்கிக் கொள்ளவும். அதன் முனைகளை வளைவாக வருவதுபோல் தேய்த்துக் கொள்ளவும்.

கருப்பு, வெள்ளை எம்சீலை சமஅளவாக எடுத்துக் கொண்டு, கையில் முகப்பவுடரை கொ...டிக்கொண்டு பிசையவும். நன்கு பிசைந்த எம்சீலை சின்ன உருண்டைகளாக உருட்டி, கையில் வைத்து இதழ்போல் இழுத்துவிடவும். பிறகு ஓரங்களை லேசாக









மடித்துவிடவும். இப்படி நமக்கு தேவையான அளவுக்கு இதழ்களை செய்து வைத்துக் கொள்ளவும். பிறகு ப்ளைவுட்டில் அந்த இதழ்கள் ஒவ்வொன்றாக சுற்றிலும் வருவது போல் ஒட்டிக்கொண்டே வரவும். எம்சீல் இறுகும் நேரத்தில் அந்த இதழ்களை மேல் நோக்கியது போல் தூக்கிப் பிடிக்கவும். அப்போதுதான் இதழ்கள் பார்வைக்குத் தெரியும்.

பிறகு ப்ளைவுட்டில் எனாமல் பெயிண்ட் அடிக்கவும். எனாமல் காய்ந்த பிறகு பூக்களுக்கு பேப்ரிக் பெயிண்ட் அடித்து, நன்கு காயவிடவும். இப்போது அழகான கீ ஹோல்டர் தயார்.

**இதை செய்யும் போது கவனிக்க வேண்டியவை :**

★ மரவேலை செய்பவரிடம் ப்ளைவுட்டை கேட்டு வாங்கும் போது, அவர்களிடமே கீ கொக்கியையும், சுவற்றில் மாட்டும் கொக்கியையும் இணைத்து வாங்கிக் கொள்ளலாம்.

★ எம்சீலை தேவைக்கு தகுந்தாற்போல் கொஞ்சமாக எடுத்து பயன்படுத்தவும். இல்லையெனில் விரைவில் இறுகிவிடும்.

★ எம்சீலை உருண்டைகளாக செய்யும்போது கையில் சிறிதளவு முகப்பவுடரைக் கொட்டி, அதில் பிசையவும். அப்போதுதான் கையில் ஒட்டாமலும், வேண்டிய வடிவமும் வரும்.

★ இதழ்போல் செய்யும் போது ஓரங்களை லேசாக மடித்துவிடவும். இப்படி செய்யும் போது இதழ்கள் சுருண்டு கொண்டு அழகாக வரும்.

★ முதலில் ப்ளைவுட்டில் எம்சீல் பூக்களை ஒட்டிய பிறகே எனாமல் பெயிண்ட் அடிக்க வேண்டும். முதலில் எனாமல் பெயிண்ட் அடித்துவிட்டு பூக்களை ஒட்டினால் ஒட்டாது, கிரிப்பாகவும் பிடிக்காது.

★ எம்சீல் கொண்டு கீ ஹோல்டர்தான் செய்யவேண்டும் என்பதில்லை. நமக்கு பிடித்தமான சுவாமி படங்களையும், இயற்கை காட்சிகளையும், பூ ஜாடிகளையும் கூட டிசைன் செய்யலாம்.

★ பூக்களுக்கு பேப்ரிக் பெயிண்ட் அடிப்பதைவிட மெட்டாலிக் பெயிண்ட் அடிக்கும்போது இன்னும் ரம்மியமாக இருக்கும். இரண்டு கலர் மெட்டாலிக் பெயிண்ட்டை கலந்து இதழ்களின் மேலே, கீழே அடிக்கும்போது டபுள் ஷேடில் பூக்கள் பளிச்சென இருக்கும்.

-சங்கீதா...







